# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.58/2013

Deposition of witness for : PW-12 15.09.2025

Name : ராஜேந்திரன்

Father's / Husband Name : வையாபுரி

**<u>எதிரிகள் ஆஜர்.</u>**

**<u>குறுக்கு விசாரணை (3–ம் எதிரி தரப்பில்)</u>**

அசா2 உங்களது விசாரணையில் வண்டியில் 3 பேர் சென்றதாகவும் அவர்கள் தன்னை திரும்பி பார்த்ததாகவும் அதில் ஒருநபர் சிக்கந்தர் என்று சொல்லியுள்ளரா என்றால் – இல்லை. 3–வது எதிரி சிக்கந்தரின் செல்போன் எண் என்னவென்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் – இல்லை. இந்த வழக்கின் மூலமே இறந்துபோன நபரை செல்போன் மூலமாக பொது கழிப்பிடம் அருகே வரச்சொல்லி அழைத்ததாக தான் என்று சொன்னால் – சரிதான். இறந்துபோன நபர் சம்பவத்திற்கு முன்பாக தொடர்பு கொண்ட செல்போன் நம்பரின் சிம்கார்டையும், அவ்வாறு தொடர்பு கொண்ட செல்போன் நம்பரின் சிம்கார்டையும் இந்த வழக்கில் கைப்பற்றி அவர்களின் செல்போன் நம்பர் என்னவென்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் – நான் இந்த வழக்கின் விசாரணையை 20 நாட்கள் மட்டுமே மேற்கொண்டதால் அதுகுறித்து தெரிந்து கொள்வதற்கு அவகாசம் இல்லை.

2) அ.சா.2–டம் அ.சா.1 வீட்டிற்குள் வந்து தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றதாக உங்களது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் – அவ்வாறு எதுவும் தெரியவரவில்லை. TN 10 R 9563 Tata Indica என்ற கார் சம்பவ இடத்திற்கு முன்பாக நின்றதாகவா அல்லது சம்பவ இடத்திற்கு 175 அடி தள்ளி நின்றதாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் (அதசாஆ.29) எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் – 175 அடி தள்ளியிருந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு வாகனமான TN 04 L4027 என்ற Hyundai கார் சம்பவ இடத்திற்கு முன்பாக நின்றதாகவா அல்லது சம்பவ இடத்திற்கு 175 அடி தள்ளி நின்றதாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் (அதசாஆ.29) எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் – 175 அடி தொலைவில் நின்றிருந்த tata indica காருக்கு 10 அடி தள்ளி நின்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரு வாகனங்களின் பதிவு எண்களும் சென்னையை சேர்ந்தது என்றால் சரிதான்.

3) மேற்படி இரு வாகனத்தின் உரிமையாளர்கள் யார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் – நான் இந்த வழக்கின் விசாரணையை 20 நாட்கள் மட்டுமே மேற்கொண்டதால் அதுகுறித்து தெரிந்து கொள்வதற்கு அவகாசம் இல்லை. அதசாஆ.5–ல் tata indica காருக்கு முன்பக்க பம்பர் இல்லையென்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் – அவ்வாறு அதசஆ.5–ல் இல்லை, அதசாஆ.31 படிவம் 91–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதசாஆ.5–ல் hyundai வண்டியின் நிறம் கருநீல நிறம் என்று உங்களாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அசா.3 கருப்பு கலர் என்று சொல்லியுள்ளார் என்றால் – அது கருநீல கலரில் தான் இருந்தது,

கருப்பு கலர் அல்ல. சாபொ.19, 20, 21 ஒரே இடத்தில் கைப்பற்றப்பட்டதா அல்லது வெவ்வேறு இடத்தில் கைப்பற்றப்பட்டதா என்றால் – வெவ்வேறு இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது. அசா.6 சாபொ.19,20,21 ஒரு இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் – மேற்படி சாட்சி ஆத்துக்காடு பாலத்தில் கைப்பற்றப்பட்டது என்பதால் ஒரே இடம் என்று குறிப்பிட்டிருக்கலாம். சாபொ.19, 20, 21 ன் அளவுகள் ஒரே மாதிரியானவையா வெவ்வேறு மாதிரியானவையா என்றால் – ஒரே மாதிரியானவை.

4) 3–வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் நள்ளிரவு 12.00 மணியிலிருந்து 01.00 மணி வரை பதிவு செய்யப்பட்டது. நள்ளிரவு 12.00 மணியிலிருந்து 01.00 மணி வரை 3–வது எதிரியிடம் விசாரணை செய்யப்பட்டதாக சொல்லப்படும் சங்கதி மனித உரிமை மீரலான செயல் என்று சொன்னால் – சரியல்ல, அது எனது பணி ரீதியான நடவடிக்கை. சொல்வது போல 3 வது எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் அதை நானாகவே எழுதிகொண்டேன் என்றாலும் – சரியல்ல. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது 23.01.2011 நள்ளிரவு 01.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் குற்ற எண்.142/2011 ஆகும். சடலக்கூராய்வு செய்ய வேண்டுகோள் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்ட படிவம் 86–ல் குற்ற எண் குறிப்பிடப்பட்டு 22.01.2011 அன்று 21.45 மணியளவில் மேற்கு விநாயகர் கோவில் பொது கழிப்பிடம் முன்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் – சரிதான். அசா.1 சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேரும் போது மருத்துவர் மனோகரன் அசா.10–டம்

தன்னை வீட்டில் வைத்து கட்டையால் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் – சரிதான். எனவே குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கும், அசா.1 ன் மூலம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகாருக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. அசா.1 டம் நான் விசாரணை செய்து போது அசா.1 ஆல் சொல்லப்பட்ட சங்கதிகளை நான் சொல்ல சொல்ல காவலர் பதிவு செய்தார்.

5) மேற்படி சங்கதி அதசாஆ.1 புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் – இல்லை. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. அசா.1 சொல்வதுபோல் இறந்துபோன நபருக்கு முதுகில் காயம் எதுவும் இல்லாத நிலையிலும் அதற்கான ஆதாரம் ஏதுமில்லாத நிலையிலும் அசா.1–ன் சாட்சியம் ஏற்கக்கூடியது என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் சம்பவ இட ஊருக்கு பவானியிலிருந்து சம்பவத்திற்கு 20 நாட்களுக்கு முன்பாகவே சம்பவ இட ஊருக்கு வந்தார் என அசா1, அசா2 உங்களது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் – சொல்லியுள்ளார்கள். குறிப்பாக எந்த தேதியில் இறந்துபோன நபர் பவானியிலிருந்து சம்பவ இடம் வந்ததாக சொல்லியுள்ளர்களா என்றால் – குறிப்பாக தேதி சொல்லவில்லை நான் விசாரிப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பாக என்ற குறிப்பிட்டுள்ளார். இறந்துபோன நபர் பவானியிலிருந்து அவரது தந்தைக்கு சாமி கும்பிட வந்ததாக சாட்சிகளின் அடிப்படையில் தெரிவித்திருந்தார்கள். அவ்வாறு சாமி கும்பிட்ட தேதி என்னவென்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் – வழக்கிற்கு தேவையில்லை என்பதால் விசாரிக்கவில்லை. அவ்வாறு வந்தவர் மீண்டும் ஏன் பவானி செல்லாமல் சம்பவ இட

ஊரிலேயே இருந்ததாக விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சொல்வது போல் இறந்துபோன நபர் சம்பவ இட ஊரான சேலத்திற்கு வரவும் இல்லை, இருந்திருக்கவும் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு குற்ற பின்னனி உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி குற்ற பின்னனி காரணமாக வேறு யாரோலோ ஏற்படுத்தப்பட்ட நிகழ்வை பொய்யாக எதிரிகளுடன் தொடர்பு படுத்தியுள்ளேன் என்று சொன்னால் – சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று சொன்னால் – சரியல்ல.

**குறுக்கு விசாரணை (8 முதல் 10, 14 எதிரிகள் தரப்பில்)**

சம்பவ இடம் காவல் நிலையத்திலிருந்து சுமார் ½ கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் குறித்து மருத்துவமனையிலிருந்து தகவல் பெறப்பட்ட பிறகுதான் நிலையத்திற்கு தெரியவந்தது என்று சொன்னால் – சரிதான். வழக்கு பதிவு செய்தபிறகு தான் சம்பவயிடம் சென்றேன், அதற்கு முன்பு செல்லவில்லை. நான் சம்பவயிடம் சென்றபோது அங்கு சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். அப்போது அங்கு ஊடகத்துறையினர் இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டது, வீடியோ எடுக்கப்படவில்லை. குறிப்பாக சம்பவயிடத்தில் சடலம் கிடந்தபோது புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் – இல்லை.

2) சம்பவத்திற்கு மறுநாள் சம்பவயிடத்தில் கிடந்த சடலத்துடன் புகைப்படம் வெளியிடப்பட்டு செய்திதாள்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது என்று சொன்னால் – வெளியிடப்பட்டிருக்கலாம்.

சம்பவயிடத்தில் முதன்முதலாக நான் விசாரணை மேற்கொண்டபோது பத்திரிக்கையாளர்கள் புகைப்படம் எடுத்தார்களா என்றால் அதுகுறித்து சரியாக சொல்ல இயலாது. சம்பவ இடத்திற்கு 23.01.2011 நள்ளிரவு 01.45 மணியளவில் நான் சென்றதாக சொன்னால் – நள்ளிரவு 01.30 மணிக்கு மேல் சென்றேன். நான் சம்பவயிடம் சென்றபோது அந்தயிடத்தில் சடலம் மல்லாந்த நிலையில் தலை கிழக்காவும் கிடந்தது என்று சொன்னால் – சரிதான். சம்பவயிடத்தில் ஒரு பார்வை மகஜரும் இரண்டு மாதிரி வரைபடங்களும் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் – சரிதான்.

3) அதசாஆ.2, 29–ல் என்னுடைய கையால் தயார் செய்யப்படவில்லை என்றால் நான் சொல்லச்சொல்ல காவலர்களால் எழுதப்பட்டது. அவ்வாறு எழுதிய காவலரை இந்த வழக்கில் சாட்சியாக சுட்டி காட்டியுள்ளேனா என்றால் அவசியம் இல்லாததால் சுட்டி காட்டவில்லை. அதசாஆ.29, 2 வரிசைகளில் எது முதலில் வரையப்பட்டது என்றால் – (அதவாது பக்கம் எண்.307 அல்லது 309 இதில் எது) பக்கம் எண்.307 முதலில் வரையப்பட்டது, 309 பிறகு வரையப்பட்டது. பக்கம் எண்.307 ல் இறந்துபோன நபரின் இருசக்கர வாகனம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் – சரிதான். சாபொ.28, 29 ஒன்று வலபுறம் நோக்கியும் ஒன்ற தென்புறம் நோக்கியும் நின்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கார்களின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தது ஆனால் பூட்டப்படவில்லை. மேற்படி கார்களை திறந்து பார்த்தீர்களா என்றால் – திறந்து பார்த்தேன். மேற்படி கார்களின் சாவியுடன் இருந்ததா என்றால்–அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

4) மேற்படி இரு கார்களையும் கைப்பற்றும் போது அதன் சாவியுடன் இருந்தாக கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் – இல்லை. மேற்படி கார்களை சம்பவயிடத்திலிருந்து மெக்கானிக் உதவியுடன் காவல் நிலையம் எடுத்துவந்தோம். மேற்படி கார்களின் பதிவு சான்றிதழ் எதுவும் கைப்பற்றவில்லை. மேற்படி வாகனங்கள் இயக்கப்பட்டு வந்ததா அல்லது இழுத்து வரப்பட்டதா என்று நினைவில்லை. இறந்துபோன நபரின் இருசக்கர வாகனத்தின் (சாபொ.9) சாவியை கைப்பற்றினேனா என்றால் – இல்லை. மேற்படி சாவி என்ன ஆனது என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் – இல்லை. மேற்படி வாகனம் சம்பவயிடத்தில் பக்கவாட்டாக பூட்டபட்டு நின்றிருந்ததா என்றால் – சாதாரணமாக தான் நின்றிருந்தது.

5) சடலத்தின் உடைகள், உடைமைகளில் என்ன இருந்தது என்று பார்த்தீர்களா என்றால் – பார்த்தேன், எதுவுமில்லை. இறந்துபோன நபர் பயன்படுத்திய செல்பேன் எங்கு கிடந்தது என்றால் பிரேதத்திற்கு அருகில் கிடந்தது, அதசாஆ.29 பக்கம் 309–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செல்போன் என்னால் கைப்பற்றப்பட்ட போது இயங்க கூடியநிலையில் இருந்ததா என்றால் – இல்லை. மேற்படி செல்போனின் IMEI number–யை மேற்படி செல்போனின் பின்புறம் திறந்து பார்த்தால் தெரியும். அதில் இரண்டு சிம்கார்டுகள் இருந்தது. பேட்டரி ஒன்று இருந்தது. பேட்டரி எண்ணை குறிப்பிடவில்லை என்றால் அது தேவையில்லை என்று குறிப்பிடவில்லை.

6) மேற்படி சிம்கார்டுகள் எந்த நிறுவனத்தை சேர்ந்தது என்று நான் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவில்லை. மேற்படி இறந்து போன நபரின்

செல்போனிலிருந்து உள் வந்த அழைப்புகள் வெளிவந்த அழைப்புகளை உரிய செல்போன நிறுவனத்திடமிருந்து பெற்று தெரிந்து கொண்டேனா என்றால் கால அவகாசம் இல்லாததால் உரிய நிறுவனத்திடமிருந்து பெறவில்லை. மேற்படி இறந்துபோன நபரின் செல்போனில் பயன்படுத்தப்பட்ட செல்போன் நம்பரை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இறந்துபோன நபரின் இருசக்கர வாகனத்தின் இன்ஜின் நம்பர் சேஸிஸி நம்பரை கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இரு கார்களின் இன்ஜின் நம்பர் மற்றும் சேஸிஸ் நம்பர் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் – சரிதான். சொல்வது போல் மேற்படி இரு கார்களும் சம்பவ இடத்தில் இருந்திருக்கவிலலை என்றாலும் பின்னிட்டு ஜோடிக்கப்பட்டவை என்பதால் தான் அவைகளில் இன்ஜின் எண்கள் சேஸிஸ் எண்கள் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் – சரியல்ல.

7) மேற்படி இரு கார்களிலும் முன் மற்றும் பின் பக்க கண்ணாடிகளில் ஸ்டிக்கர் ஏதாவது இருந்ததா என்பதை பார்த்து குறிப்பிட்டேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் சுமார் காலை 09.00 மணி வரை இருந்தேன். பார்வை மகஜர், சம்பவ இட கைப்பற்றுதல் மகஜரில் கிராம நிர்வாக அதிகாரி அவரது உதவியாளர் சாட்சியாக இருந்துள்ளார்கள் என்றால் – சரிதான். மேற்படி கிராம நிர்வா அதிகாரி மற்றும் உதவியாளருக்கு என் தகவலின் பேரில் நிலைய தலைமை காவலர் அல்லது காவல் உதவி ஆய்வாளர் தகவல் கொடுத்திருக்கலாம். அவர்களுக்கு சாட்சியாக இருக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால இல்லை, வாய்மொழி வேண்டுகோள் தான்.

8) சம்பவ இடதத்தில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி விஏஓ அவரது உதவியாளர் அவர்களுடைய அவலக முத்திரையை பதித்திருக்கவில்லை என்றால் – சரிதான். சம்பவயிடத்தில் நான் சென்றது முதல் விசாணையை முடிக்கும் வரை மேற்படி விஏஓ அவரது உதவியாளர் என்னுடன் தான் இருந்தார்கள். பிரேத விசாரணை அதிகாலை 03.00 மணியளவில் துவக்கப்பட்டு அதிகாலை 06.30 மணியளவில் முடிவுற்றது. பிரேத விசாரணை அறிக்கையில் அசா3 கையெழுத்திடவில்லை. அரசு மருத்துவமனையில் இருந்து 22.01.2011 அன்று இரவு 11.00 மணியளவில் தகவல் கிடைத்தது. லதா என்பவர் தாக்கப்பட்டு சிகிச்சைக்கு சேர்ந்துள்ளதாக தகவல் கிடைத்தது. மருத்துவமனையில் மேற்படி லதாவை யார் அடையாளம் காட்டியது என்று சொன்னால் – நான் மருத்துவமனை சென்று புறக்காவலில் தகவலை பெற்று அதன்படி மருத்துவமனைக்கு சென்று விசாரித்தபோது லதா என்பவர் தன்னை அறிமுகப்படுத்தி கொண்டார்.

9) அதசாஆ.26, அதசாஆ.27–யை மருத்துவமனையிலிருந்து நான் தான் பெற்று வந்தேன். அதசாஆ.27–ல் பக்கம் எண்.387–யை முதலில் பெற்று காயப்பட்ட நபரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பிறகு அதசாஆ.26–யை பெற்றேன். அதன்பிறகு இரண்டு நாட்கள் கழித் அதசாஆ.27–ல் பக்கம் எண்.385–யை பெற்றேன். அதசாஆ.27 பக்கம் எண்.387 மற்றும் அதசாஆ.26 ல் காயம்பட்ட நபரின் பெயர் லதா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் – சரிதான். காயம்பட்ட நபரிடம் நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் அவர் அவருடைய பெயர் பிரேமலதா என்று குறிப்பிட்டிருந்தார்.

10) மேற்படி காயம்பட்ட நபரின் இருபெயர் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் காயம்பட்ட நபரே தனது பெயர் பிரேமலதா என்றதால் அதற்கான ஆதாரம் எதுவும் பெறவில்லை. காயம்பட்ட அசா.1 மருத்துவரிடத்தில் அதசாஆ.26—ன் படி தான் அடையாளம் தெரியாத 12 நபர்களால் கட்டையால் தாக்கப்பட்டதாக தகவல் தெரிவித்துள்ளார் என்றால் — சரிதான். அசா.1 மருத்துவரிடத்தில் தன்னுடைய விலாசமாக 23, கிழக்கு தெரு, 8 ஜான்சன்பேட்டை, சேலம்—7 என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் — சரிதான். மேற்கூறிய விலாசத்தில் தாக்கப்பட்டதாக அசா.1 அதசாஆ.26—ல் குறிப்பிட்டுள்ளார் என்றால் — சரிதான். அதசாஆ.26 ன் படி அசா.1 தாக்கப்பட்டதாக தனியாக வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் — அதசாஆ.26 ன்—படி அசா.1 கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

11) அதசாஆ.1 புகார் வாக்குமூலம் மூன்று பக்கங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான், அதில் மூன்றாவது பக்கத்தில் தான் வாக்குமூலம் கொடுத்தவரின் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் — சரிதான், ஏனைய இருபக்கங்களில் கையெழுத்து பெறப்படவேண்டியது அவசியமில்லை என்பதால் வாங்கவில்லை. அதசாஆ.1 ல் முதல் இரண்டு பக்கங்களில்தான் சம்பவம் குறித்தும் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து காணப்படுகிறது என்றாலும் மூன்றாம் பக்கத்தில் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் பற்றி காணப்படவில்லை என்றால் — சரியல்ல. குறிப்பாக மேற்படி புகார் வாக்குமூலத்தை எழுதிய காவலர் பெயர் தற்சமயம் நினைவில்லை. அதசாஆ.1 ன் முதல் இரண்டு பக்கங்கள் அசா1 ஆல்

கொடுக்கப்பட்டது அல்ல என்றாலும் பின்னிட்டு மேற்படி 1, 2 பக்கங்கள் மாற்றி இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகாரின் மூன்றாம் பக்கத்தின் இறுதியில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் எழுதப்பட்டது.

12) 8 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மூன்று பக்கங்களை கொண்டது என்றால் – சரிதான். அதில் இறுதியில்தான் எதிரியின் கையெழுத்து மற்றும் சாட்சிகளின் கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் – சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்றாலும் காவலரால் எழுதப்பட்டது என்றாலும் – சரிதான். சொல்வதுபோல் 8 முதல் 10, 14–எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் அவர்களிடம் வெற்று பேப்பரில் கையெழுத்து பெறப்பட்டு என்னால் பின்னிட்டு நிரப்பிகொள்ளப்பட்டது என்றாலும் – சரியல்ல. அவ்வாறு 8 முதல் 10, 14–எதிரிகளிடமிருந்து சொன்ன சான்று பொருட்கள் சொன்ன நேரத்தில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அவைகள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் – சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அனைத்து வீச்சருவாள்களும் ஒரே அளவுடையது என்று சொன்னால் – சற்று மாறுபாடுடன் உள்ளது.

13) மேற்படி சான்று பொருட்களில், சாபொ.16–ல், 2–வது எண்ணிட்ட அருவாள் முரளி (எ) முரளிகிருஷ்ணா என்ற எதிரியிடமிருந்தும் மற்றும் சா.பொ.17–ல் 28–வது எண்ணிட்ட அருவாள் கேரளா மணி என்ற எதிரியிடமிருந்தும் கைப்பற்றப்பட்டது (98% சரியாக இருக்கும் என்று கூறுகிறார்.). சாபொ.16, சாபொ.17 அருவாள்கள் வழக்கிற்காக பின்னிட்டு

தயாரிக்கப்பட்டது என்றால் – சரியல்ல. மேற்படி சாபொ.16, சாபொ.17 உடனடியாக நீதிமன்றத்தை அடையவில்லை என்று சொன்னால் – சரியல்ல. இறந்துபோன நபருக்கு பல குற்ற வழக்குகள் உள்ளது என்று சொன்னால் – சரிதான்.

14) அசா.1 உங்கள் விசாரணையில் 14 வது எதிரி வீச்சருவாளுடன் வந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் – இல்லை. அசா.1 வந்த நபர்கள் தன் தம்பி செந்திலை சுற்றி நின்றதாகவும் தான் விட்டுவிடுங்கள் என்று சொன்னதாகவும் உங்கள் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் – இல்லை. அசா.1 க்கு 8 வது எதிரி முரளி, 9 வது எதிரி மணி, 10 வது எதிரி சந்துரு, 14 வது எதிரி ராதாகிருஷ்ணன் ஆகியோரை சம்பவத்திற்கு முன்பே தெரியும் என்று உங்களது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் – இல்லை. சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லையென்றாலும் மேற்படி இறந்துபோன நபரின் பகையாளிகள் யாரோ செய்த குற்றத்தினால் அவர்களை சரியாக புலன் விசாரணை செய்து கண்டுபிடிக்க இயலாமல் எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (13 வது எதிரி தரப்பில்)</u>

இந்த வழக்கில் எதிரிகளை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். அசா.1 ன் புகார் வாக்குமூலத்தில் 12 எதிரிகளின் பெயர்களை தான் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் – சரிதான், மற்றும் சிலர் என்று குறிப்பிட்டுள்ளார். அசா.1 யை மருத்துவமனையில் அவரது உறவினர் வீரப்பன் சேர்த்துள்ளார் என்று

சொன்னால் – சரிதான். மேற்படி வீரப்பனை சாட்சியாக சுட்டிக் காட்டவில்லை என்று சொன்னால் – சரிதான்.

**(1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் முன் வைக்கப்பட்ட எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை (12 வது எதிரி தரப்பில்)**

**(1 முதல் 11, 13, 14 எதிரிகளின் தரப்பில் முன் வைக்கப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 12 வது எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**மறுவிசாரணை அரசு தரப்பில்.**

23.01.2011 தேதியிட்ட சடலக்கூராய்வு வேண்டுகோள் கடிதம் பக்கம் 326 முதல் 332 வரையிலானவைகள் இதுதான், அது **அதசாஆ.45** ஆகும்.

**மறுவிசாரணை (8 முதல் 10, 14 எதிரிகள் தரப்பில்).**

இறந்துபோன நபர் தங்க மோதிரம் அணிந்திருந்ததாக அதசாஆ.45 ல் குறிப்பு எதுவுமில்லை என்று சொன்னால் – சரிதான்.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.